


தீபாவளி பண்டிகையையொட்டி முன்னாள் அமைச்சர் எஸ்.பி. வேலுமணி எம்.எல்.ஏ.வை கோவை 13–வது வட்ட அ.தி.மு.க. செயலாளர் யு.பி. கிஷோர் என்ற கார்த்திக் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

### ரோட்டோரம் குழந்தை கிடந்ததாக புகார்:

# தத்தெடுத்த குழந்தையை வளர்க்க முடியாததால் நாடகமாடிய இளம்பெண்

## கோவை அருகே பரபரப்பு

கோவை, நவ.13–

கோவை தொப்பிலி பாளையம் அருகே உள்ள காமாட்சி அம்மன் கோவில் வீதியை சேர்ந்தவர் தங்கவேல். இவரது மனைவி புஷ்பலதா (வயது 34). இவர்களுக்கு திருமணமாகி கடந்த 15 ஆண்டுகள் ஆகிறது. ஆனால் குழந்தைகள் இல்லை.

**குழந்தை தத்தெடுப்பு**

இந்தநிலையில் ஒரு குழந்தையை புஷ்பலதா தத்து எடுத்து வளர்க்க விரும்பினார். கடந்த ஆகஸ்டு 1–ந்தேதி ஆறுமுக கவுண்டனூரை சேர்ந்த 31 வயது இளம்பெண்ணுக்கு வடவள்ளியில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் ஆண் குழந்தை பிறந்தது. இந்த குழந்தையை புஷ்பலதா பெற்றோர் சம்மதத்துடன் சட்டவிரோதமாக தத்து எடுத்தார். பின்னர் குழந்தையை தனது வீட்டிற்கு எடுத்து சென்று வளர்த்து வந்தார். ஆனால் அவரால் குழந்தையை சரியாக வளர்க்க முடியவி ல்லை. இதனால் அவர் மிகவும் சிரமத்துக்கு ள்ளானார்.

**குழந்தை மீட்பு**

சம்பவத்தன்று புஷ்பலதா குழந்தைகள் உதவி எண்ணுக்கு தொடர்பு கொண்டார். அப்போது அதில் பேசியவர்களிடம் ஈஷா செல்லும் வழியில் யாரோ 3 மாத கைக்குழந்தையை விட்டு சென்று விட்டதாக கூறினார். அதன் பின்னர் கோவை மாவட்ட குழந்தைகள் உதவி மைய அதிகாரிகள் புஷ்பலதாவை தொடர்பு கொண்டு பேசினர். அப்போது அவர் சுண்டக்காமுத்தூர் பஸ் நிறுத்தம் அருகே நின்று கொண்டு இருப்பதாக கூறினார். உடனடியாக அதி காரிகள் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று 3 மாத குழந்தையை மீட்டனர். பின்னர் புஷ்பலதாவிடம் விசாரித்த போது அவர் முன்னுக்கு பின் முரணாக பதில் அளித்தார்.

இதனால் சந்தேகம் அடைந்த அதிகாரிகள் இது குறித்து பேரூர் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். உடனடியாக போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர். விசாரணையில் புஷ்பலதா, தத்து எடுத்து குழந்தையை வளர்க்க முடியாததால் யாரோ குழந்தையை விட்டு சென்று விட்டதாக நாடகமாடியது தெரிய வந்தது. அதிகாரிகள் குழந்தையை மீட்டு அரசு ஆஸ்பத்திரியில் உள்ள குழந்தைகள் மையத்துக்கு அனுப்பி வைத்தனர்.

பேரூர் போலீசார் புஷ்பலதாவிடம் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

### கோவையில் பரிதாபம்

# தீபாவளி அன்று குடிபோதையில் தகராறு செய்த கணவரால் இளம்பெண் தற்கொலை

## ஆர்.டி.ஓ. விசாரணை

கோவை, நவ.13–

புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலையை சேர்ந்தவர் வடிவேல். இவரது மனைவி உமாமகேஸ்வரி (வயது 23).

இவர்களு க்கு கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்தது. 2 ஆண் குழந்தைகள் உள்ளனர். இவர்கள் குடும்பத்துடன் தற்போது கோவை சூலூர் அருகே உள்ள காடம்பாடி யில் குடும்பத்துடன் வசித்து வருகிறார்கள்.

**ஊருக்கு செல்வதில் தகராறு**

இவர்கள் ஆண்டுதோறும் தீபாவளி பண்டிகைக்கு அவர்களது சொந்த ஊருக்கு செல்வது வழக்கம். இந்தநிலையில் வடிவேல் தனது மனைவியிடம் ஊருக்கு செல்லலாம் என கூறி இருந்தார்.

ஆனால் அவர் இந்த வருடம் ஊருக்கு அழைத்து செல்ல வில்லை. இதனால் கணவன்–மனைவிக்கு இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்தது.

நேற்று வெளியே சென்ற வடிவேல் மது குடித்து விட்டு வீட்டிற்கு வந்தார். பின்னர் அவர் போதையில் படுத்து தூங்கினார்.

அப்போது உமா மகேஸ்வரி தனது தாயிடம் செல்போனில் சத்தமாக பேசிக்கொண்டு இருந்தார். இதில் வடிவேலுக்கு ஆத்திரம் ஏற்பட்டது. ஏன் கத்துகிறாய் என கேட்டார்.

அப்போது அவர்களுக்கு இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. அதற்கு உமா மகேஸ்வரி தினமும் தான் குடித்து விட்டு வருகிறாய். இன்று தீபாவளி பண்டிகை, இன்றுமா குடித்து விட்டு வருவாய். உன்னுடன் வாழ்வதற்கு நான் என் அம்மா வீட்டிற்கே சென்று விடுவேன் என கூறினார்.

**தற்கொலை**

பின்னர் வாழ்க்கையில் விரக்தி அடைந்த அவர் வீட்டில் உள்ள அறையில் தூக்கு போட்டு தற்கொலைக்கு முயன்றார். இதனை பார்த்து அதிர்ச்சி யடைந்த வடிவேல் தனது மனைவியை அக்கம் பக்கத்தினர் உதவியுடன் மீட்டு அந்த பகுதியில் உள்ள அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றார். அங்கு அவரை பரிசோதனை செய்த டாக்டர்கள் அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். இது குறித்து சூலூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

திருமணமான 5 வருடத்தில் உமாமகேஸ்வரி தற்கொலை செய்து கொண்டதால் ஆர்.டி.ஓ. விசாரணை நடந்து வருகிறது.

### வெவ்வேறு விபத்தில்

# எலக்ட்ரீசியன் உள்பட 3 பேர் பலி- 5 பேர் படுகாயம்

கோவை, நவ.13–

திண்டுக்கல் மாவட்டம் பழனி ஆயக்குடியை சேர்ந்தவர் பரத்கண்ணன் (வயது 24). எலக்ட்ரீசியன். இவரது நண்பர் வேலூரை சேர்ந்த நித்தீஸ் (22).

சம்பவத்தன்று இவர்கள் 2 பேரும் ஒரு மோட்டார் சைக்கிளில் கோவை–பொள்ளாச்சி ரோட்டில் சென்று கொண்டு இருந்தனர். மோட்டார் சைக்கிளை பரத் கண்ணன் ஓட்டிச் சென்றார். ஒத்தகால்மண்டபம் அருகே சென்ற போது எதிரே வந்த மற்றொரு மோட்டார் சைக்கிள் இவர்கள் சென்ற மோட்டார் சைக்கிள் மீது எதிர்பாராத விதமாக மோதியது. இந்த விபத்தில் பரத் கண்ணன் பலியானார். ஆனைமலை ரெங்கையா முதலியார் வீதியை சேர்ந்தவர் பரணி (37). ஆட்டோ டிரைவர். சம்பவத்தன்று இவர் தனது ஆட்டோவில் நண்பர்களான தண்டபாணி, கோபால், சாகுல் அமீது ஆகியோருடன் ஆனைமலை – சங்கம்பாளையம் ரோட்டில் அரியணை வாய்க்கால் அருகே சென்ற போது திடீரென ஆட்டோ கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்தது. இந்த விபத்தில் டிரைவர் பரணி பலியானார். காரமடை அருகே உள்ள தொட்டிப்பாளையத்தை சேர்ந்தவர் முருகன் (50). கட்டட தொழிலாளி. சம்பவத்தன்று இவர் கோவை–மேட்டுப்பாளையம் ரோட்டில் உள்ள தடுப்பு சுவற்றில் அமர்ந்து இருந்தார். திடீரென பஸ் வருவதை பார்க்காமல் முருகன் ரோட்டில் நடந்தார். அப்போது பஸ் மோதி அவர் பலியானார்.

**தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறை**
**அருள்மிகு காசிவிசுவநாத சுவாமி திருக்கோயில், தென்காசி நகர், தென்காசி வட்டம் மற்றும் மாவட்டம் tenkasitemple@gmail.com**

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு எண் 1/2023-2024 நாள்: 11.11.2023

தென்காசி மாவட்டம், வட்டம், மற்றும் நகர் அருள்மிகு காசிவிசுவநாத சுவாமி திருக்கோயில் செயல்அலுவலர் அவர்களால் கீழ்க்காணும் விபரப்படியான பணிக்கு ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் 30.11.2023 முதல் 19.12.2023 வரை பதிவிறக்கம் கீழ்கண்ட தமிழ்நாடு அரசின் அதிகாரப்பூர்வ ஒப்பந்தப்புள்ளி இணையதளம் (https://tntenders.gov.in) மூலம் செய்து கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளிகள் இணையத்தளத்தில் 20.12.2023 தேதி அன்று மாலை 5.45 மணி வரை பெறப்படும். பெறப்பட்ட இணையதள ஒப்பந்தப்புள்ளிகள் 21.12.2023 அன்று காலை 11.00 மணிக்கு தூத்துக்குடி கோட்ட பொறியாளா மற்றும் வருகைப்புரிந்துள்ள ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களால் நியமனம் செய்யப்பட்ட முகவர் முன்னிலையில் மின்னணு ஒப்பந்தப்புள்ளி தென்காசி அருள்மிகு காசிவிசுவநாத சுவாமி திருக்கோயில் செயல்அலுவலர் அலுவலகத்தில் வைத்து திறக்கப்படும். மேலும் முன்வைப்புத் தொகையினை தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் இணையதளம் மூலமாக திருக்கோயில் செயல்அலுவலர் அருள்மிகு காசிவிசுவநாத சுவாமி திருக்கோயில் தென்காசி, என்ற பெயரில் செலுத்தப்படவேண்டும். அனைத்து ஆவணங்களும் PDF ஆக இணைக்கப்பட வேண்டும். முக்கிய விவரங்கள் ஒப்பந்தப்புள்ளி ஆவணம் மற்றும் திருத்திய விவரங்கள் (https://tntenders.gov.in) மட்டுமே பெறவேண்டும் செய்தித்தாளில் வெளியிடப்படாது.

| வ. எண் | பணியின் பெயர் | ஒப்பந்தத் தொகை ரூ | முன் வைப்புத் தொகை ரூபாயில் | பணி முடிக்க வேண்டிய காலம் | ஒப்பந்தக்காரர் தகுதி |
|---|---|---|---|---|---|
| 1 | இராஜகோபுரம் பழுது பார்த்து புனரமைக்கும் பணி | 1,51,11,124.00 | 86,000.00 | 18 மாதங்கள் | தமிழ்நாடு அரசுதுறை /அரசு நிறுவனங்கள்- இந்து சமய அறநிலையத்துறையில் பதிவு பெற்ற ஸ்தபதி / சிற்பி நடப்பிலுள்ள தகுதிவாய்ந்த வகுப்பு |

சு.கவிதா, தக்கார் — செ.ம.தொ.இ./6019/ஒப்பந்தப்புள்ளி/2023 — இரா.முருகன், செயல்அலுவலர்

EMERALD

# எமரால்டு ஜீவல் இண்டஸ்ட்ரி இந்தியா லிமிடெட்

CIN : U03691TZ2004PLC011255

பதிவு அலுவலகம் : 230, திருவேங்கடசாமி சாலை (கிழக்கு), ஆர்.எஸ்.புரம், கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா-641002. தொலைபேசி : 0422-4222200 / 80567 58444

தொலைநகல் : 0422-2555560, மின்னஞ்சல் : investorrelations@ejindia.com, இணையதளம் : www.ejindia.com

**டெபாசிட்டுகள் ஏற்பு**

| திட்டம் 'அ' (குமுலேட்டிவ் அல்லாதது) | | திட்டம் 'ஆ' (குமுலேட்டிவ்) | | | | |
|---|---|---|---|---|---|---|
| காலம் | வருடாந்திர வட்டி விகிதம் (%) காலாண்டுக்கு ஒருமுறை வட்டி வழங்குதல் | காலம் | வருடாந்திர வட்டி விகிதம் (%) காலாண்டுக்கு ஒருமுறை வட்டியை கூட்டி முதிர்வு தேதியில் வழங்குதல் | குறைந்த பட்ச டெபாசிட் தொகை (ரூ) | முதிர்வுத் தொகை வழங்குதல் (ரூ) | ஆண்டு விளை பயன் |
| 1 ஆண்டு | 8.00% | 1 ஆண்டு | 8.00% | 10,000 | 10824 | 8.24% |
| 2 ஆண்டுகள் | 8.25% | 2 ஆண்டுகள் | 8.25% | 10,000 | 11774 | 8.87% |
| 3 ஆண்டுகள் | 9.00% | 3 ஆண்டுகள் | 9.00% | 10,000 | 13060 | 10.20% |

திட்டம் அ, திட்டம் ஆ, இவ்விரு திட்டங்களின் கீழ் ஏற்றுக்கொள்ளப்படும் டெபாசிட் தொகையானது ₹.1000/-ன் மடங்குகளாக குறைந்தபட்சம் ₹.10,000/- ஆக இருக்க வேண்டும்.

## படிவம் டெபாசிட் 1

### சுற்றறிக்கை அல்லது டெபாசிட்டுகளை வரவேற்க, விளம்பர வடிவில் சுற்றறிக்கை

2014-ம் வருடத்தைய கம்பெனிகள் (டெபாசிட்டுகள் ஏற்பு) விதிகள் பிரிவு 73(2) (a) மற்றும் பிரிவு 76 விதி 4(1) மற்றும் 4(2)ன் படி இந்த சுற்றறிக்கை அல்லது விளம்பர வடிவிலான சுற்றறிக்கை கீழே தரப்பட்டுள்ள விரிவான நிபந்தனைகளின் படி ஃபிக்சட் டெபாசிட்டுகளை நிறுவனம் வரவேற்று ஏற்கிறது

**1.பொது விவரங்கள்**

A. **பெயர், விலாசம், இணையதளம் மற்றும் கம்பெனியை அணுக தேவையான விவரங்கள் :**
பெயர் : எமரால்டு ஜீவல் இண்டஸ்ட்ரி இந்தியா லிமிடெட்
CIN : U03691TZ2004PLC011255
விலாசம் : 230, திருவேங்கடசாமி சாலை (கிழக்கு), ஆர்.எஸ்.புரம், கோவை-641002
இணையதளம் : www.ejindia.com
தொலைபேசி : 0422-4222200, தொலைநகல் : 0422-2555560
மின்னஞ்சல் : investorrelations@ejindia.com

B. **கம்பெனி நிறுவப்பட்ட தேதி : 27-ஜீலை 2004**

C. I) **கம்பெனி நடத்தும் வணிகம் :** நிறுவனம் தங்கம், வெள்ளி, பிளாட்டினம் மற்றும் வைர நகைகள் மற்றும் பிற விலை மதிப்பற்ற உலோகங்களை உற்பத்தி செய்தல், வர்த்தகம், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளது மேலும் தங்கம், வெள்ளி, பிளாட்டினம் மற்றும் வைரநகைகளை அதன் சில்லரை விற்பனை நிலையங்கள் மூலம் தமிழகம் மற்றும் பாண்டிச்சேரி ஆகிய இடங்களில் விற்பனை செய்து வருகிறது.

ii) **கம்பெனியின் துணை நிறுவனங்கள் மற்றும் யூனிட்டுகள் :**

**1.துணை நிறுவனங்கள் :**

a) **இந்தியானியா ஜீவல்லரி கம்பெனி பிரைவேட் லிமிடெட்** – தங்க வர்த்தகம் செய்து வருகிறது
b) **எமரால்டு ஜீவல்லர்ஸ் டி.எம்.சி.சி துபாய்** (வெளிநாட்டு நிறுவனம் (முற்றிலும் துணை நிறுவனம்)) தங்கம், வெள்ளி, வைர நகைகள் மொத்த விற்பனையில் ஈடுபட்டுள்ளது
c) **ஜீவல்ஒன் ஜீவல்லரி எல்எல்சி துபாய்** (வெளிநாட்டு நிறுவனம் (எமரால்டு ஜீவல்லர்ஸ் டி.எம்.சி.சி கம்பெனியின் முற்றிலும் துணை நிறுவனம்)) தங்கம், வெள்ளி, வைர நகைகள் மொத்த விற்பனையில் ஈடுபட்டுள்ளது

**2.யூனிட்டுகள் :**

யூனிட் 1 : 300, 301/A, 1B, மேட்டுப்பாளையம் சாலை, நரசிம்மநாயக்கன்பாளையம், கோயமுத்தூர், தமிழ்நாடு-641031.
யூனிட் 2 : 817, சலிவன் வீதி, கோயமுத்தூர், தமிழ்நாடு-641001.
யூனிட் 3 : 355 to 357 & 358, இடையார்வீதி, கோயமுத்தூர், தமிழ்நாடு-641001.
யூனிட் 4 : 460, 461/1, 462/1C, 462/2A, கதிர்நாயக்கன்பாளையம் சாலை, தொப்பம்பட்டி தபால், கோயமுத்தூர், தமிழ்நாடு-641017.
யூனிட் 5 : யூனிட் நெ. C-6, WICEL, SEEPZ மெயின் கேட் எதிரில், MIDC சாலை, அந்தேரி கிழக்கு, மும்பை, மஹாராஷ்டிரா-400093.
யூனிட் 6 : நெ.8 பழமத்தூர், உத்திரமேரூர் மெயின் ரோடு, புக்கத்துறை, மதுராந்தகம் தாலுக்கா நடராஜபுரம், செங்கல்பட்டு, தமிழ்நாடு-603308.

D. **நிறுவன மேலாண்மை பற்றிய சுருக்கமான விவரங்கள் :**
நிறுவனம், தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், துணை நிர்வாக இயக்குநர் மற்றும் தொழில்முறை மேலாளர்கள் மூலம் நிர்வகிக்கப்படுகிறது. ஆயினும் இது இயக்குநர் குழுவின் மேற்பார்வை, கட்டுப்பாடு மற்றும் கட்டளைக்கு உட்பட்டது.

E. **இயக்குநர்களின் பெயர்கள், முகவரிகள், DIN மற்றும் தொழில்கள் :**

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | DIN | தொழில் |
|---|---|---|---|
| 1 | திரு.K.சீனிவாசன் 12 & 13, பாதர்ரேன்டி வீதி, ஆர்.எஸ்.புரம், கோயமுத்தூர்-641002. | 00022753 | வியாபாரம் |
| 2 | திருமதி.சக்தி சீனிவாசன் 12 & 13, பாதர்ரேன்டி வீதி, ஆர்.எஸ்.புரம், கோயமுத்தூர்-641002. | 00022792 | வியாபாரம் |
| 3 | திரு.G.K.வெங்கடகோபால் B-56, ஸ்ரீவத்சா கார்டன்ஸ், மேட்டுப்பாளையம் சாலை, துடியலூர், கோயமுத்தூர்-641034. | 00022835 | சர்வீஸ் |
| 4 | திரு.தியான் சக்தி சீனிவாசன் 12 & 13, பாதர்ரேன்டி வீதி, ஆர்.எஸ்.புரம், கோயமுத்தூர்-641002. | 03363397 | வியாபாரம் |
| 5 | திருமதி.S.நிஸ்டாஸ்ரீ 12 & 13, பாதர்ரேன்டி வீதி, ஆர்.எஸ்.புரம், கோயமுத்தூர்-641002. | 07412463 | வியாபாரம் |
| 6 | திரு.R.வெங்கடேசன் 50, ஆரோக்கியசாமி சாலை (மேற்கு), ஆர்.எஸ்.புரம், கோயமுத்தூர்-641002. | 01980254 | வழக்கறிஞர் |
| 7 | திருமதி.R.ரேணுகாதேவி 3/453, செம்மிபாளையம், பல்லடம் திருப்பூர்-641662. | 06497153 | கம்பெனி செயலாளர் & IBC ப்ரொபசனல் |
| 8 | திரு.ராமகிருஷ்ண சுந்தர் பிளாட் எண்.404, அல்லூராஹில்ஸ் & டேல்ஸ் Phase 3, பிஷப் ஸ்கூல் அருகில், பூனே-411060 | 08687870 | மேலாண்மை ஆலோசகர் |

F. **இடர் காரணிகள் பற்றிய நிர்வாகத்தின் கண்ணோட்டம் :**
• எமரால்டு ஜீவல் இண்டஸ்ட்ரி இந்தியா லிமிடெட் – இந்தியாவிலேயே நகை உற்பத்தி செய்வதில் முன்னணி நிறுவனங்களில் ஒன்றாக திகழ்கிறது.
• நிகரமதிப்பு, செயல்பாடுகள் மற்றும் பணப்பாய்வுகளின் வருவாய்கள் எந்தவொரு கடனையும் திருப்பிச்செலுத்த போதுமானதாக உள்ளது.
• நிறுவனத்தின் தொழில்துறை ஒழுங்கமைக்கப்பட்ட / ஒழுங்கமைக்கப்படாத ஆகிய இரண்டு பிரிவுகளின் கீழும், போட்டி சூழ்நிலையில் செயல்படுகிறது.
• தங்கவிலை ஏற்ற இறக்கத்தினால் ஏற்படும் லாபச்சரிவு.
• தொழிலில் உள்ள உள்ளார்ந்த வரையறைகளில் மிக முக்கியமானது வாடிக்கையாளர்களின் மாறிவரும் நாகரிகம் மற்றும் அவர்களின் விருப்பங்கள்.

G. **திரும்ப தர வேண்டிய தொகை, தவறிய காலம் மற்றும் தற்போதைய நிலைமை போன்ற நிறைவேற்றத்தவறியவை பற்றிய விவரங்கள் :**

| | |
|---|---|
| i) சட்டப்பூர்வமாக செலுத்த வேண்டிய தொகை | ஏதும் இல்லை |
| ii) கடன் பத்திரங்கள் மற்றும் அவற்றின் மேல் வட்டி | ஏதும் இல்லை |
| iii) ஏதேனும் வங்கி மற்றும் நிதி நிறுவனத்திடமிருந்து கடன் மற்றும் அதன் மேல் வட்டி | ஏதும் இல்லை |

**2.டெபாசிட் திட்டம் பற்றிய விவரங்கள் :**

a. இயக்குநர்கள் குழுவின் தீர்மானம் நிறைவேறிய தேதி : 19.09.2023
b. டெபாசிட்டுகளை வரவேற்க பொதுக்குழுவில் அனுமதி தீர்மானம் நிறைவேற்றப்பட்ட தேதி : 29.12.2018
c. டெபாசிட்டுகள் வகை ஈடுள்ளவை அல்லது ஈடற்றவை : ஈடற்றவை
d. டெபாசிட்டுகள் தொகை பற்றிய விவரங்கள் :

| வ.எண் | விபரங்கள் | தொகை (ரூ) (லட்சங்களில்) |
|---|---|---|
| 1 | சட்டம் மற்றும் விதிமுறைகளின்படி, டெபாசிட்டுகள் மூலம் கம்பெனி ஏற்கக்கூடிய தொகை : உறுப்பினர்களிடமிருந்து : செலுத்தப்பட்ட பங்கு மூலதனம், ப்ரீசர்வ்கள் மற்றும் பங்கு உயர்மதிப்பு கணக்கு தொகை இவைகளின் கூட்டுத்தொகையில் 10% : | 7428.15 |
| | பொதுமக்களிடமிருந்து : செலுத்தப்பட்ட பங்கு மூலதனம், ப்ரீசர்வ்கள் மற்றும் பங்கு உயர்மதிப்பு கணக்கு தொகை இவைகளின் கூட்டுத்தொகையில் 25% : | 18570.37 |
| 2 | இதற்கு முந்தைய நிதி ஆண்டின் கடைசி நாளன்று கைவசமுள்ள மொத்த டெபாசிட் தொகை : | 672.35 |
| 3 | சுற்றறிக்கை அல்லது விளம்பர நாளன்று கைவசம் இருந்த மொத்த டெபாசிட் தொகை : (19.09.2023 அன்று) | 708.18 |
| 4 | டெபாசிட்டுகள் ஏற்புக்காக திட்டமிட்டுள்ள தொகை : | 10,000 |
| 5 | அடுத்த பன்னிரெண்டு மாதங்களில் திருப்பித்தரவேண்டிய டெபாசிட் தொகை (நிதியாண்டு 2023-24) | 193.45 |

e. **டெபாசிட்டுகளை திரட்டுவதற்கான நிபந்தனைகள் :**
i) திட்டகாலம் : டெபாசிட்டுகள் ஓராண்டு/இரண்டாண்டுகள்/மூன்றாண்டுகளுக்கு ஏற்கப்படுகின்றன
ii) வட்டிவிகிதம் :

| திட்டம்-அ | | |
|---|---|---|
| 1 ஆண்டு | 2 ஆண்டுகள் | 3 ஆண்டுகள் |
| 8.00% | 8.25% | 9.00% |

காலாண்டுக்கு ஒருமுறை தனி வட்டி விகிதம் வழங்கப்படும்

| திட்டம்-ஆ | | |
|---|---|---|
| 1 ஆண்டு | 2 ஆண்டுகள் | 3 ஆண்டுகள் |
| 8.00% | 8.25% | 9.00% |

வட்டி காலாண்டுக்கு ஒருமுறை கூட்டிணைக்கப்பட்டு திட்டகாலம் முடிவடையும் நேரத்தில் மொத்த தொகை வழங்கப்படும்

iii) தொகை செலுத்தும் மற்றும் திருப்பி தரும் முறை :

| | |
|---|---|
| a) தொகை செலுத்தும் முறை : காசோலை / DD / NEFT / RTGS / UPI | |
| b) தொகை திரும்பத்தரும் முறை : காசோலை / DD / NEFT / RTGS / UPI | |

f. திட்டம் துவங்கும் தேதி மற்றும் சுற்றறிக்கை அல்லது விளம்பரம் நடப்பிலுள்ள காலம் ஆகியவை பற்றிய உத்தேச கால அட்டவணை : இந்த திட்டம் நிறுவன பதிவாளரிடம் சமர்பிக்கப்பட்டு 30 நாட்களுக்குப்பிறகு திறக்கப்படும். 2023-24 நிதியாண்டின் மீதமுள்ள காலத்தில் மற்றும் 2024-25 நிதியாண்டில் புதிய சுற்றறிக்கை வெளியிடப்படும் தேதி வரை தொடர்ந்து சந்தாக்களை ஏற்றுக்கொள்ள இந்த சுற்றறிக்கை வெளியிடப்படுகிறது. இந்த சுற்றறிக்கை செப்டம்பர் 30, 2024 வரை அல்லது 2024ம் ஆண்டின் நிறுவனத்தின் ஆண்டு பொதுக்குழுக் கூட்டத்தேதி வரை இதில் எது முன்போ அதுவரை செல்லுபடியாகும்.

g. டெபாசிட்டுகளை திரட்டுவதற்கான காரணங்கள் அல்லது குறிக்கோள்கள் : நிறுவனத்தின் நடைமுறை முதலீட்டு தேவைகளுக்காக திரட்டப்படுகிறது.

h. பெற்றுள்ள கடன் மதிப்பீட்டு சான்றிதழ் :
i) கடன் மதிப்பீட்டு ஏஜென்சியின் பெயர் : ICRA லிமிடெட்
ii) பெற்றுள்ள கடன் மதிப்பீட்டு சான்றிதழ் : A-
iii) சான்றிதழின் பொருள் : நிலையானது
iv) சான்றிதழ் பெற்ற நாள் : 10.08.2023

I. டெபாசிட்டுகளை பெற ஏதேனும் ஈடு செய்யப்பட்டிருந்தால் அல்லது திட்டமிடப்பட்டிருந்தால் அவை பற்றிய விவரம் : பொருந்தாது

J. அவ்வாறு பெறப்படும் டெபாசிட்டுகளில் கம்பெனியின் இயக்குநர்கள், புரமோட்டர்கள் அல்லது முக்கிய பதவியில் உள்ள நிர்வாகத்தினர் ஆகியவர்களில் எவருக்கேனும் நிதிசார்ந்த அல்லது வேறு விதமான ஆதாயம் இருந்தால், அதைப்பற்றிய விவரங்கள், பிறரிடமிருந்து அத்தகைய ஆதாயம் வேறுபடும் விவரங்கள் : நிறுவனம் அனைவருக்கும் பொதுவான வட்டித்தொகையை வழங்குகிறது, நிறுவனத்தின் இயக்குநர்களுக்கோ, நிறுவனர்களுக்கோ அல்லது அதன் மேலாண்மை அதிகாரிகளுக்கோ வேறுபட்ட/ கூடுதல் வட்டித்தொகை ஏதும் வழங்கப்படவில்லை.

**3.நிலுவையில் உள்ள டெபாசிட்டுகள் பற்றிய விவரங்கள் :** (ரூ.லட்சங்களில்)

| | |
|---|---|
| a. நிலுவைத்தொகை 31.03.2023 அன்று | 672.35 |
| b. டெபாசிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட நாள் | பல்வேறு தேதிகளில் |
| c. ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்த தொகை | 472.40 (நிதியாண்டு 2022-23ல்) |
| d. வட்டி விகிதம் | 10%, 7%, 7.25%, 8%, 8.25%, 9% |
| e. டெபாசிட்டுதாரர்களின் எண்ணிக்கை 31.03.2023 அன்று | 149 |
| f. டெபாசிட்டுகளை திருப்பி வழங்குவதிலும், வட்டி வழங்குவதிலும் தவறியிருந்தால், டெபாசிட்டுதாரர்களின் எண்ணிக்கை, தொகை மற்றும் காலம் பற்றிய விவரம் | இல்லை |
| g. டெபாசிட்டுதாரர்கள், டெபாசிட்டுகள் மீதான வட்டியை விலக்களித்தல் | இல்லை |

**4.நிறுவனத்தின் நிதி நிலைமை :**

a. சுற்றறிக்கை அல்லது விளம்பர தேதிக்கு முந்தைய, சமீபத்திய மூன்று நிதியாண்டுகளுக்கான வரி செலுத்துவதற்கு முன் மற்றும் பின், நிறுவனத்தின் இலாபங்கள் :

| நிதியாண்டு | வரிக்கு முன் லாபம் (ரூ.லட்சங்களில்) | வரிக்கு பின் லாபம் (ரூ.லட்சங்களில்) |
|---|---|---|
| 2020-21 | 10,889.82 | 9,153.35 |
| 2021-22 | 10,292.90 | 7,630.70 |
| 2022-23 | 10,392.39 | 7,889.03 |

b. கம்பெனி மேற்கண்ட மூன்று ஆண்டுகளில் அறிவித்த டிவிடெண்ட் மற்றும் கடந்த மூன்று ஆண்டுகளில் வட்டி கவரேஜ் விகிதம் (வரிக்குப்பின் ரொக்க இலாபம் + செலுத்தப்பட்ட வட்டி / செலுத்தப்பட்ட வட்டி) :

| நிதியாண்டு | 2020-21 | 2021-22 | 2022-23 |
|---|---|---|---|
| அறிவித்த டிவிடென்ட்(%) | 100% | 25% | 100%* |
| வட்டி கவரேஜ் விகிதம் | 4.13 | 3.65 | 3.19 |

*19.09.2023 அன்று நடைபெற்ற இயக்குநர் குழு கூட்டத்தில், 2022-23ம் நிதியாண்டிற்கான இறுதி ஈவுத்தொகையாக ஒரு சமநிலைப்பங்கிற்கு ரூ.5 (50%) என நிறுவனத்தின் 19வது பொதுக்குழு கூட்டத்திற்குப் பங்குதாரர்களின் ஒப்புதலுக்காக முன்மொழியப்பட்டது.

c. இந்த சுற்றறிக்கை அல்லது விளம்பரம் வெளியிடுவதற்கு முந்தைய மூன்று ஆண்டுகளில் தணிக்கை செய்யப்பட்ட கம்பெனியின் சுருக்கமான நிதி நிலைமை : (ரூ.லட்சத்தில்)

| பொறுப்புகள் | 31.03.2023 அன்று | 31.03.2022 அன்று | 31.03.2021 அன்று | சொத்துக்கள் | 31.03.2023 அன்று | 31.03.2022 அன்று | 31.03.2021 அன்று |
|---|---|---|---|---|---|---|---|
| சமநிலை பங்கு மூலதனம் | 809.41 | 809.41 | 838.95 | நடப்பிலல்லாத சொத்துக்கள் | 48686.11 | 46069.13 | 44120.83 |
| வைப்புகள் மற்றும் உபரி | 74920.49 | 67198.13 | 64332.10 | நடப்பு சொத்துக்கள் | 146075.10 | 121365.86 | 118324.20 |
| நடப்பிலல்லாத பொறுப்புகள் | 11497.51 | 13366.93 | 13330.39 | | | | |
| நடப்பு பொறுப்புகள் | 107533.80 | 86060.52 | 83943.59 | | | | |
| மொத்தம் | 194761.21 | 167434.99 | 162445.03 | | 194761.21 | 167434.99 | 162445.03 |

d. சுற்றறிக்கை அல்லது விளம்பர தேதிக்கு முன்னர் வந்த கடைசி மூன்று ஆண்டுகளில் தணிக்கை செய்யப்பட்ட ரொக்க ஓட்ட அறிக்கை : (ரூ.லட்சங்களில்)

| விவரங்கள் | 31.03.2023 | 31.03.2022 | 31.03.2021 |
|---|---|---|---|
| செயல்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து ரொக்க ஓட்டம் | 4862.39 | (2548.17) | (671.75) |
| முதலீட்டு செயல்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து ரொக்க ஓட்டம் | (5276.61) | (4832.69) | (3792.71) |
| நிதி நடவடிக்கைகளிலிருந்து ரொக்க ஓட்டம் | 1017.54 | 7439.04 | 5262.31 |
| பணம் அல்லது பணத்திற்கு ஈடான மதிப்பின் நிகர உயர்வு / (குறைவு) | 603.32 | 58.18 | 797.85 |

e. கடந்த மூன்று ஆண்டுகளில் கம்பெனியின் கணக்கியல் கொள்கையில் ஏற்பட்ட மாற்றம், அதனால் கம்பெனியின் இலாபங்கள் மற்றும் ரிசர்வுகள் மீது ஏற்பட்ட விளைவுகள் :
நிறுவனத்தின் நிதியறிக்கைகள், நிறுவனங்கள் சட்டம், 2013-ன் பிரிவு 133 உடன் இணைந்த நிறுவனங்கள் (இந்திய கணக்குப்பதிவு தரங்கள்) விதிகள் 2015ன் கீழ் இந்திய கணக்குப்பதிவு தரங்களுக்கு ஏற்ப ("Ind As") தயார் செய்யப்பட்டுள்ளது.

**5.இயக்குநர்களின் பிரகடனம் :**

இயக்குநர்கள் குழு இதன் மூலம் அறிவிப்பதாவது :

a. சட்டம் செயல்படுத்துவதற்கு முன்போ அல்லது பின்போ ஏற்றுக்கொள்ளப்பட்ட டெபாசிட்களை திருப்பி அளிப்பதிலோ அதற்கான வட்டி வழங்குவதிலோ கம்பெனி இதுவரை தவறியதில்லை. கம்பெனி கடந்த ஐந்து வருடங்களாக இத்தகைய வைப்புத்தொகைகளில் இயல்பான நிகழ்வுகளுடன் செயல்பட்டு வருகிறது.

b. இயக்குநர்களின் குழு, கம்பெனியின் மதிப்பிடப்பட்ட எதிர்கால நிதிநிலையின் படி கம்பெனி தனது கடன்களை செலுத்த வேண்டிய நேரத்தில் சரியாக செலுத்தும் என்றும் இந்த சுற்றறிக்கை அல்லது விளம்பரம் வெளியிடும் தேதியில் இருந்து ஒரு வருட காலத்திற்குள் கம்பெனி திவாலாகாமல் நல்ல நிலையில் இருக்குமென இயக்குநர்களின் குழு கருதுகிறது.

C. இந்த நிறுவனம் சட்டத்தின் நிபந்தனைகளுக்கும், அதன் கீழுள்ள விதிகளுக்கும் இணங்கி நடக்கிறது.

d. இந்தச்சட்டத்திற்கும் விதிகளுக்கும் இணங்கி நடப்பதால், மத்திய அரசு டெபாசிட்டுகளைத் திருப்பியளிக்கும் என்று உத்தரவாதம் அளிக்கவில்லை.

e. 2014-ம் வருடத்தைய கம்பெனிகள் (டெபாசிட்டுகள் ஏற்பு) விதிகள் பிரிவு 19-ன் படி, இந்தச் சட்டம் துவங்குவதற்கு முன் நிறுவனத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட டெபாசிட்டுகள் டெபாசிட்டுதாரர்களுக்கு திருப்பியளிக்கப்படும், கோரப்படாத மீதமுள்ள சந்தா தொகைகள் பிணையம் வைக்கப்படாததாகக் கருதப்பட்டு, மற்ற பிணையாக வைக்கப்படாத நிறுவனத்தின் கட்டுப்பாடுகளுக்கு சமமானதாகக் கருதப்படும்.

f. கிரெடிட் மதிப்பீட்டில் ஏதேனும் எதிர்மறை மாற்றம் ஏற்பட்டால், டெபாசிட் செய்தவர்களுக்கு அபராதம் ஏதுமின்றி டெபாசிட்டுகளைத் திரும்பப் பெற வாய்ப்பளிக்கப்படும்.

g. சுற்றறிக்கையில் அல்லது விளம்பர வடிவிலான சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களுக்காக மட்டுமே டெபாசிட்டுகள் பயன்படுத்தப்படும்.

h. நிறுவனத்தால் ஏற்றுக்கொள்ளப்படும் டெபாசிட்டுகள் (பிணை டெபாசிட்டுகள் தவிர மற்றவை, ஏதேனும் இருந்தால், அவற்றின் மொத்தத் தொகையை குறிப்பிடப்பட வேண்டும்) பிணையாக வைக்கப்படாது. மேலும் மற்ற பிணையாக வைக்கப்படாத நிறுவனத்தின் கட்டுப்பாடுகளுக்கு சமமானதாகக் கருதப்படும்.

குறிப்பு : இந்த விளம்பரத்தின் வாசகமானது கம்பெனியின் இயக்குநர் குழுவால் 19.09.2023 அன்று நடைபெற்ற கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. கம்பெனிகள் (டெபாசிட்டுகள் ஏற்பு) 2014 விதிகள் மற்றும் மாற்றங்களின் படி கம்பெனியின் பெரும்பான்மை இயக்குநர்களால் கையெழுத்திடப்பட்ட இவ்விளம்பரத்தின் நகல் கோவையில் உள்ள கம்பெனிகள் பதிவாளர் அலுவலகத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்விளம்பரம் இயக்குநர் குழுவின் அதிகாரப்படி அவர்கள் பெயரில் வெளியிடப்படுகிறது.

**இடம் : கோயமுத்தூர்**
**தேதி : 19-09-2023**

**இயக்குநர் குழுவின் உத்தரவின்படி**
**எமரால்டு ஜுவல் இண்டஸ்ட்ரி இந்தியா லிமிடெட்**
**G.கார்த்திக்-கம்பெனி செயலாளர்**

**தணிக்கையாளர் சான்றிதழ் படிவம் DPT 1**

M/s.B.தியாகராஜன் & கோ, எமரால்டு ஜுவல் இண்டஸ்ட்ரி இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் சட்டப்பூர்வ தணிக்கையாளர்களாகிய நாங்கள் வழங்கிய சான்றிதழ் :
எமரால்டு ஜுவல் இண்டஸ்ட்ரி இந்தியா லிமிடெட், கம்பெனிகள் சட்டம் 2013 செயல்படுத்துவதற்கு முன்போ அல்லது பின்போ ஏற்றுக்கொண்ட டெபாசிட்டுகளை திருப்பி அளிப்பதிலோ அல்லது அதற்கான வட்டி வழங்குவதிலோ இதுவரை தவறியதில்லை என நாங்கள் சான்றளிக்கிறோம். மேலும் இந்த சான்று நிறுவனத்தின் கணக்கு புத்தகங்களையும், செயலக பதிவுகளையும் ஆராய்ந்தும் மற்றும் எங்களுக்கு வழங்கப்பட்ட தகவல்கள் / விளக்கங்களின் அடிப்படையிலும் கொடுக்கப்பட்டது.

இடம் : கோயமுத்தூர்
தேதி : 19-09-2023

B.தியாகராஜன் & கோ
பட்டய கணக்காளர்கள்
நிறுவன பதிவு எண் : 004371S

D.ஆறுச்சாமி
பார்ட்னர்
உறுப்பினர் எண் : 219156